


02.10.2026

தலைப்புச் செய்திகள்

- தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் 157-வது பிறந்தநாளை ஒட்டி புதுதில்லி ராஜ்காட்டில் அன்னாரது நினைவிடத்தில் குடியரசு தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.
- உலகளாவிய நெருக்கடிகளின் போது இந்தியாவின் குரல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.
- தமிழ்நாட்டில் அரசு பேருந்துகளில் மகளிருக்கு விரிவுபடுத்தப்பட்ட கட்டணமில்லா பயண திட்டத்தை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று தொடங்கி வைத்தார்.
- தமிழகத்தில் பொது சுகாதார கட்டமைப்பு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் கூறியுள்ளார்.
- ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா இன்று 2 தங்கம் உட்பட 5 பதக்கங்களை கைப்பற்றி பதக்கப்பட்டியலில் 6-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

காந்தி ஜெயந்தி

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் 157-வது பிறந்தநாள் இன்று நாடுமுழுவதும் காந்தி ஜெயந்தியாக கொண்டாடப் படுகிறது.

புதுதில்லியில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடமான ராஜ்கட்டில் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

சர்வமத பிரார்த்தனையும் நடைபெற்றது.

இந்நாளையொட்டி குடியரசு தலைவர், பிரதமர், முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் உள்ளிட்டோர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில்

காலத்தால் அழியாத காந்தியடிகளின் கொள்கைகள் ஒரு சிறந்த சமூகத்தை நோக்கியும், வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை நோக்கியும், நம்மை தொடர்ந்து வழிநடத்தட்டும் என்று கூறியுள்ளனர்.

காந்தி ஜெயந்தி சர்வதேச அஹிம்சை தினமாக இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

திருச்சி தலைமை தபால் நிலையம் அருகில் உள்ள காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ்,

ஆட்சித்தலைவர் திரு. பிரதிக் தாயள் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

காந்தி ஜெயந்தி மாவட்டங்கள்

காந்திஜெந்தியை ஒட்டி விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் நடைபெற்ற போதை ஒழிப்பு விழிப்புணர்வு வாக்கத்தான் போட்டியில் ஆயிரத்து 700 மகளிர் பங்கேற்றனர்.

விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டதோடு வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த ராணுவம் மற்றும் துணை ராணுவப்படையினருக்கு இன்று வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

சேலம் மகாத்மா காந்தி தபால்தலை அருங்காட்சியகத்தில் காந்தியடிகளின் பெருமைகளை போற்றும் வகையில் போலந்து, கென்யா, மெக்சிகோ, கிரீன்லாந்து, ஸ்காட்லாந்து உள்ளிட்ட நாடுகள் வெளியிட்ட தபால் தலைகள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

தூத்துக்குடியில் பெண்களுக்கு சமஉரிமை, சமவாய்ப்பு வழங்குவதை வலியுறுத்தி விழிப்புணர்வு மாரத்தான் நடைபெற்றது.

நாமக்கல் மாவட்டம் பொன்னேரி குளத்தில் நிலத்தடி நீரை அதிகரிக்கும் வகையில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பனை விதைகள் இன்று நடப்பட்டன.

❖❖❖❖❖❖❖❖❖❖

வேலூர்

காந்தி ஜெயந்தியை ஒட்டி வேலூர் கோட்டையில் தூய்மைபாரத இயக்கத்தின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை

ஆட்சித்தலைவர் திருமதி. லீலா அலெக்ஸ் இன்று தொடங்கிவைத்தார்.

பொதுமக்கள் சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிப்பதன் அவசியம் குறித்தும், குப்பைகளை முறையாக அகற்றுவது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சுற்றுப்புறத்தை தூய்மையாக பேண வேண்டியது அவசியம் என்று கல்லூரி மாணவி தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

கிராமசபை

காந்தி ஜெயந்தியை ஒட்டி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு கிராமசபை கூட்டங்கள் இன்று நடைபெற்றன.

இக்கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம், பொது நிதி செலவினம், தூய்மையான குடிநீர் விநியோகம் உறுதிசெய்தல், சிறு பாசன குளங்கள் மற்றும் ஏரிகள் புதுப்பித்தல், தூய்மை இந்தியா இயக்கம் உள்ளிட்டவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

விருது

காந்தி ஜெயந்தியை ஒட்டி தமிழகத்தில் மதுவிலக்கு அமலாக்க துறையில் சிறப்பாக செயல்பட்ட திருச்சி மாவட்ட தனிபிரிவு காவல் ஆய்வாளர் திரு. ராமன் உள்ளிட்ட 5 காவல்துறையினருக்கு இந்த ஆண்டிற்கான காந்தியடிகள் காவலர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விருது, வரும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும்.

❖❖❖❖❖❖❖❖❖❖

லால்பகதூர் சாஸ்திரி

முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் 122-வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தை ஒட்டி புதுதில்லி விஜய்கட்டில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி.ராதா கிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

காமராஜர்

சுதந்திரபோராட்ட வீரரும் தமிழக முன்னாள் முதலமைச்சருமான காமராஜரின் 51-வது நினைவுநாள் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி.ராதா கிருஷ்ணன், மத்திய தகவல் ஒளிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் உள்ளிட்டோர் வெளியிட்டுள்ள செய்தியில்,

தன்னலமற்ற பொது சேவைக்காக தனது வாழ்நாளை அவர் அர்ப்பணித்ததோடு, தலைமுறை தாண்டியும் நினைவு கூறத்தக்க தலைவர் என புகழாரம் சூட்டியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஸ்மித் மச்சார்

துபாயிலிருந்து இஸ்ரேலின் டெல்அவிவ் நகருக்கு சென்ற ஃபிளை துபாய் விமானத்தில் சக விமானியின் தாக்குதலை முறியடித்து 180 பயணிகளின் உயிரை காப்பாற்றிய இந்திய விமானி கேப்டன் ஸ்மித் மச்சாரின் துணிச்சலை பாராட்டிய பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர் விரைவில் குணமடைய தாம் பிரார்த்திப்பதாக கூறினார்.

ஸ்மித் மச்சாரிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய பிரதமரிடம், இச்சம்பவத்தின் போது தனக்கு கிடைத்த மனஉறுதி மற்றும் அனுபவங்களை அவர் பகிர்ந்து கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

உலகளாவிய நெருக்கடிகளின் போது இந்தியாவின் குரல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் உலக அமைதிக்காக பிரதமர் திரு. நரேந்திரமோடி மேற்கொண்டு வரும் முயற்சிகளை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் பாராட்டியிருப்பது ஒவ்வொரு இந்தியருக்கும் மிகுந்த பெருமையளிப்பதாக கூறியுள்ளார்.

இந்தியாவின் வசுதெய்வ குடும்பகம் என்ற காலத்தால் அழியாத பாரம்பரியத்திற்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் பேரிடர் காலங்களில் இந்தியா உதவிக்கரங்களை நீட்டி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

பியூஷ்கோயல்

அமெரிக்காவின் மில்வாக்கி நகரில் நடைபெற்ற ஜி-20 வர்த்தக அமைச்சர்கள் கூட்டத்தின் ஒருபகுதியாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் பிரான்ஸ், கனடா, தென்கொரிய நாட்டு அமைச்சர்களுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்த ஆலோசனைகளை மேற்கொண்டார்.

பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் நிக்கோலஸ் ஃபோரிசியருடன் ஆலோசனைகளை மேற்கொண்ட திரு. பியூஷ்கோயல், இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரைவுப்படுத்துவது, விண்வெளி உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்த பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

இந்தியா – கனடா இடையேயான இருதரப்பு வர்த்தகத்தை வரும் 2030-ம் ஆண்டிற்குள், 50 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்துவது தொடர்பாக அந்நாட்டு அமைச்சர் மனீந்தர் சித்து உடன் ஆலோசித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

சேவா சங்கல்ப்

.. Music ..

பிரதமர் திரு.நரேந்திரமோடி 25 ஆண்டுகள் பொது வாழ்க்கையை நிறைவு செய்துள்ள நிலையில், வளர்ச்சி அடைந்த பாரத பாதை என்ற பிரதமரின் தொலைநோக்கு பயணத்தில், மக்கள் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, அடல் சுரங்கப்பாதை குறித்த செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. Music ..

உலக புகழ்பெற்ற Rohtang கணவாயின் கீழ் கட்டப்பட்டுள்ள அடல் சுரங்கப்பாதை நவீன பொறியியல் தொழில்நுட்பத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

அடல் சுரங்கப்பாதை ஹிமாச்சல பிரதேசத்தின் பழங்குடியின பகுதி இணைப்பை மேம்படுத்தி முழுமையான போக்குவரத்தையும் முன்னெடுத்து செல்கிறது.

எல்லைப்பகுதிகள் குறிப்பாக "லே" லடாக் உடனான போக்குவரத்து இணைப்பையும் அடல் சுரங்கப்பாதை எளிதாக்கி உள்ளது.

.. Music ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் - பேருந்து

தமிழ்நாட்டில் அரசு பேருந்துகளில் மகளிருக்கு விரிவுபடுத்தப்பட்ட கட்டணமில்லா பயண திட்டத்தை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இன்று தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் மூலம் நாள்ஒன்றுக்கு 84 லட்சத்திற்கும் மேற்பட்ட மகளிர் பயனடைவார்கள்.

மாநகர மற்றும் நகரப்பகுதிகளில் இயங்கும் Express, LSS, Delux உள்ளிட்ட அரசு பேருந்துகளில் மகளிர் இலவசமாக பயணிக்கலாம்.

இத்திட்டத்தின் கீழ் 12 ஆயிரத்து 695 பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

விழுப்புரத்தில் இத்திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஷேக் அப்துல் ரஹ்மான் தொடங்கிவைத்தார்.

தென்காசி மாவட்டத்தில் வெற்றி பயண திட்டத்தின் கீழ் 107 பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாக போக்குவரத்து துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அருண்ராஜ்

தமிழகத்தில் பொது சுகாதார கட்டமைப்பு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் கூறியுள்ளார்.

இன்று அவர் வெளியிட்டுள்ள செய்தியில் அரசு மருத்துவமனைகளில் தேவையான அனைத்து மருத்துவ கட்டமைப்புகள், மருத்துவ பணியாளர்களின் எண்ணிக்கை உள்ளிட்டவைகள் போதுமான அளவில் உள்ளதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ரமேஷ்

ஸ்ரீரங்கம் கோவில் நில முறைகேடு தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் நலத்திட்டங்களை அரசு படிப்படியாக நிறைவேற்றி வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

தாயுமானவன்

கலைமாமணி, மிருதங்கம், கஞ்சிரா மகா வித்வான் திருச்சி தாயுமானவன் இன்றுகாலை காலமானார்.

அன்னாருக்கு வயது 96.

திருச்சி அகில வானொலி நிலையத்தில் 22 ஆண்டுகள் மிருதங்க வித்வானாக பணியாற்றிய அவர், மிருதங்கம் மற்றும் கொன்னக்கோளில் டாப் கிரேடு, கஞ்சிராவில் ஏ கிரேடு அங்கீகாரம் பெற்றவர்.

பிரபல இசைக்கலைஞர்கள் தியாகராஜ பாகவதர், கே.பி. சுந்தராம்பாள், ஆலத்தூர் சகோதரர்கள், மதுரை சோமு, சித்தூர் சுப்ரமணியம் பிள்ளை ஆகியோருக்கு இவர் மிருதங்க பக்கவாத்தியம் வாசித்தவர்.

அன்னாரது இறுதிச்சடங்கு நாளை பிற்பகல் திருச்சி பாலக்கரையில் நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

திருவண்ணாமலையில் வன உயிரின வார விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி. வந்தனா கார்க் இன்று தொடங்கிவைத்தார்.

கல்லூரி மாணாக்கர், வன அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்ற இப்பேரணியில் வனவிலங்குகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஆசிய விளையாட்டு

ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா இன்று 2 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் என 5 பதக்கங்களை கைப்பற்றியுள்ளது.

இந்திய வில்வித்தை RECURVE மகளிர் குழு தங்க பதக்கத்தையும்,

ஆடவர் மற்றும் கலப்பு பிரிவில் வெள்ளி பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளது.

மகளிர் குத்துச்சண்டை 75 கிலோ எடைப்பிரிவில் லவ்லினா தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

மகளிர் டிங்கி சிறுபடகு போட்டியில் நேத்ரா குமணன் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

இந்தியா இதுவரை 12 தங்கம் 25 வெள்ளி, 34 வெண்கலம் என 71 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் 6-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖